# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, தத்துவங்கள் கைமாற்றல் (பெரும்பாகச் செயலாளர்கள்) சட்டம்

*[1992, நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1992 நவெம்பர் மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, தத்துவங்கள் கைமாற்றல் (பெரும்பாகச் செயலாளர்கள்) சட்டம்.

[1992, நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஓ. 72/92

பல்வேறு சட்டங்களின்கீழ் அரசாங்க அதிபர்களால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பெரும்பாகச் செயலாளர்களுக்குக் கைமாற்றுவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. (1) இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, தத்துவங்கள் கைமாற்றல் (பெரும்பாகச் செயலாளர்கள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

(2) பிரிவுகள் 2, 8, 9 ஆகியவற்றின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) பிரிவுகள் 3, 4, 5, 6 அத்துடன் 7 ஆகியவற்றின் ஏற்பாடுகள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். வெவ்வேறு ஏற்பாடுகள் தொடர்பிலும் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாமென்பதுடன், அவ்வாறே, பெரும்பாகச் செயலாளரின் பெரும்பாகம் ஒன்று தொடர்பாக அத்தகைய ஏதேனும் எற்பாட்டில் உள்ள "நியமித்த தேதி" பற்றிய குறிப்பீடு ஒன்று, அத்தகைய பெரும்பாகச் செயலாளரின் பெரும்பாகத்தில் எந்தத் தேதியன்று அத்தகைய ஏற்பாடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதோ அந்தத் தேதி பற்றியதொரு குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏதேனும் பெரும்பாகச் செயலாளரின் பெரும்பாகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமிடத்து, அந்தப் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான சட்டம், அப்பிரிவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள திருத்தங்களுக்கு அமைவாக, அத்தகைய பெரும்பாகச் செயலாளரின் பெரும்பாகத்தில் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

2. அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் அத்தகைய எண்ணிக்கையினதான பெரும்பாகச் செயலாளர்களின் பெரும்பாகங்களைத் தாபிக்கலாம். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் அவ்வாறு தாபிக்கப்படும் (இதனகத்துப் பின்னர் ஒரு "பெரும்பாகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெரும்பாகச் செயலாளரின் பெரும்பாகம் ஒவ்வொன்றினதும் பெயரையும் அதன் எல்லைகளையும் தருதல் வேண்டும். பெரும்பாகச் செயலாளர்களின் பெரும்பாகங்களைத் தாபித்தல்.

பெரும்பாகங்களைப் பெரும்பாகச் செயலாளருக்குக் குறித்தொதுக்குதல்.

3. (1) பெரும்பாகம் ஒவ்வொன்றும் பெரும்பாகச் செயலாளர் ஒருவருக்கு அவரது அதிகாரத்திற்குட்பட்ட இடப்பரப்பாகக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெரும்பாகச் செயலாளர் அத்தகைய பெரும்பாகத்திற்குள் எழுத்திலான சட்டத்தால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட, அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பெரும்பாகச் செயலாளர் ஒருவர் அவரை நியமிக்கும் அதிகாரியின் ஒருப்பாட்டுடன் அவரது பெரும்பாகத்தினுள் மாகாண சபையொன்றின் ஒரு நியதிச் சட்டத்தால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை அல்லது மாகாணமொன்றின் ஆளுநரால் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

எழுத்திலான சட்டத்தின் பொருள் கோடல்.

4. (1) இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது ஏதேனும் அறிவித்தலில், அனுமதிப் பத்திரத்தில், தகவல் தொடர்பில் படிவத்தில் அல்லது வேறு ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் "அரசாங்க அதிபர்", "மாவட்டத்தின் அரசாங்க அதிபர்", "நிர்வாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அல்லது உதவி அரசாங்க அதிபர்", "அரசாங்க அதிபர், எவரேனும் மேலதிக அரசாங்க அதிபர், எவரேனும் உதவி அரசாங்க அதிபர், அல்லது எவரேனும் மேலதிக உதவி அரசாங்க அதிபர்", "நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றினதும் அரசாங்க அதிபர்" அல்லது "மாகாணமொன்றின் அரசாங்க அதிபர்" என்னும் சொல்லமைப்புகளுள் எவையும் காணப்படுமிடமெல்லாம் அவற்றிற்குப் பதிலாகப் "பெரும்பாகச் செயலாளர் பெரும்பாகத்தின் பெரும்பாகச் செயலாளர்" என்னும் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

(2) நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் பாகம் II இல் "அரசாங்க அதிபர்" என்னும் சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக "மாவட்டச் செயலாளர்" என்னும் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள், சட்டநடவடிக்கைகள் என்பன பற்றிய பேணல்கள்.

5. (1) நிருவாக மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபரால் அல்லது சார்பில், நியமித்த தேதிக்கு முன்னதாகச் செய்யப்பட்டும், வழங்கப்பட்டும், அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டும் அத்தகைய தேதியன்று உளதாயிருக்கின்றதுமான எத்தன்மைத்தான ஒப்பந்தம், உடன்படிக்கை, அல்லது வேறு ஆவணம் ஒவ்வொன்றும் அத்தேதியிலிருந்து,

அந்த ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு சாதனம் அல்லது ஆவணம் எந்தப் பெரும்பாகத்தைத் தொடர்புறுத்துகின்றதோ அந்தப் பெரும்பாகத்தின் பெரும்பாகச் செயலாளரினால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்டதாக, வழங்கப்பட்டதாக அல்லது எழுதி நிறைவேற்றப் பட்டதாக, அல்லது செய்யப்பட்டிருக்கின்றதாக, வழங்கப்பட்டிருக்கின் றதாக அல்லது நிறைவேற்றப்பட்டிருக்கின்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க அதிபரினால் அல்லது அவருக்கு எதிராக, அல்லது அரசாங்க அதிபர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அல்லது அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டும், நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று முடிவுறாதிருப்பனவுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், நியமித்த தேதியிலிருந்து அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அல்லது அவருக்கு எதிராகக் தொடுக்கப்பட்ட வழக்குகளாக அல்லது வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

(3) அரசாங்க அதிபரினால் அல்லது அவருக்கு எதிராக அல்லது அரசாங்க அதிபர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அல்லது அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பதியப்பட்டும் அல்லது செய்யப்பட்டும் அத்துடன் நியமித்த தேதிக்கு முற்போந்த நாளன்று திருப்திப்படுத்தப்படாது இருக்கின்றதுமான பணக்கொடுப்பனவு தொடர்பிலான எல்லாத் தீர்வைகளும் அத்துடன் அளிப்புகளும் நியமித்த தேதியிலிருந்து அரசைப் பிரிதிநிதித்துவப்படுத்துவதாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அல்லது அவருக்கு எதிராகப் பதியப் பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்வைகளாக அல்லது அளிப்புகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம்.

6. ஐயங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக, இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றது :— எழுத்திலான சட்டத்தினைப் பொருள் கோடல் செய்தல்.

(அ) நியமித்த தேதிக்கு முற்போந்த நாளன்று, எழுத்திலான வேறேதேனும் சட்டம், நிருவாக மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபருக்கு ஏதேனும் துணைவிதியை, ஒழுங்குவிதியை, விதியை, கட்டளையை, அறிவிப்பை அல்லது அறிவித்தலை ஆக்குவதற்கான தத்துவத்தை அளிக்குமிடத்து அத்தகைய சட்டமானது, நியமித்த தேதியிலிருந்து அந்த நிருவாக மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பெரும்பாகத்தினதும் பெரும்பாகச் செயலாளருக்கு அந்தப் பெரும்பாகத்திற்கு அத்தகைய ஏதேனும் துணைச்சட்டத்தை, ஒழுங்கு விதியை, விதியை, கட்டளையை, அறிவிப்பை அல்லது அறிவித்தலை ஆக்குவதற்கான தத்துவத்தை அளிக்கின்றதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) நியமித்த தேதிக்கு முற்போந்த நாளன்று, எழுத்திலான ஏதேனும் சட்டம் ஒரு நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு ஏதேனும் உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை அல்லது பதிவுச் சான்றிதழை அல்லது வேறு ஆவணத்தை வழங்குவதற்கான தத்துவத்தை அளிக்குமிடத்து, அத்தகைய சட்டமானது நியமித்த தேதியிலிருந்து அந்த நிருவாக மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பெரும்பாகத்தினதும் பெரும்பாகச் செயலாளருக்கு, அந்தப் பெரும்பாகத்திற்கு அத்தகைய ஏதேனும் உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை அல்லது பதிவுச் சான்றிதழை அல்லது வேறு ஆவணத்தை வழங்குவதற்கான தத்துவத்தை அளிக்கின்றதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(இ) நியமித்த தேதிக்கு முற்போந்த நாளன்று, எழுத்திலான ஏதேனும் சட்டம் ஒரு நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு எவையேனும் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளைத் தீர்மானிப்பதற்கான தத்துவத்தை அளிக்குமிடத்து, அத்தகைய சட்டமானது நியமித்த தேதியிலிருந்து அந்த நிருவாக மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பெரும்பாகத்தினதும் பெரும்பாகச் செயலாளருக்கு அந்தப் பெரும்பாகத்திற்கு எவையேனும் அத்தகைய கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளைத் தீர்மானிப்பதற்கான தத்துவத்தை அளிக்கின்றதாகப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

(ஈ) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று வேறு ஏதேனும் எழுத்திலான சட்டமானது ஒரு நிருவாக மாவட்டத்தின் ஏதேனும் பாகத்தின் ஏதேனும் கருமம் தொடர்பிலான அத்தகைய ஏதேனும் அறிவித்தல், தகவல், வெளிப்படுத்துகை, விபரத்திரட்டு அல்லது வேறு ஆவணம் அந்த நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு ஒப்படைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து அத்தகைய சட்டமானது நியமித்த தேதியிலிருந்து அந்த அறிவித்தல், தகவல் வெளிப்படுத்துகை, விபரத்திரட்டு அல்லது வேறு ஆவணம் அந்த நிருவாக மாவட்டத்தின் அந்தப் பாகம் அமைந்துள்ள பெரும்பாகத்துக்கான பெரும்பாகச் செயலாளருக்கு ஒப்படைக்கப்படவேண்டுமென அனுப்பப்படவேண்டுமென அல்லது கொடுக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்துவதாகப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

**துணைவிதிகள், முதலியன தொடர்பிலான பேணல்கள்.**

7. (1) இச்சட்டமானது நியமித்த தேதிக்கு முன்னர் ஏதேனும் பிற எழுத்திலான சட்டத்தின்கீழ் நிருவாக மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபரினால் செய்யப்பட்ட ஏதேனும் துணைவிதியின், ஒழுங்குவிதியின், விதியின், கட்டளையின், அறிவிப்பின் அல்லது அறிவித்தலின் தொழிற்பாட்டைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய துணைவிதி, ஒழுங்குவிதி, விதி, கட்டளை, அறிவிப்பு அல்லது அறிவித்தல் ஒவ்வொன்றும் நியமித்த தேதியிலிருந்து நேரொத்த பெரும்பாகச் செயலாளரினால் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டமானது வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம், அனுமதிப் பத்திரம், பதிவுச் சான்றிதழ் அல்லது வேறு ஆவணத்தின் தொடர்ந்து வலுவிலிருக்கும் தன்மையையும் நியமித்த தேதிக்கு முன்னர் நிருவாக மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபரினால் எழுதி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனத்தின் செல்லுபடியாந்தன்மையையும் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய உரிமம் அனுமதிப் பத்திரம், பதிவுச் சான்றிதழ் அல்லது வேறு ஆவணம் ஒவ்வொன்றும் நியமித்த தேதியிலிருந்து நேரொத்த பெரும்பாகச் செயலாளரினால் வழங்கப்பட்டதாக அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) நிருவாக மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபர் நியமித்த தேதிக்கு முன்னர் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அவர் மீது சுமத்தப்பட்ட தத்துவத்தின் பயனால் ஏதேனும் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளைத் தீர்மானிக்கின்றவிடத்து அத்தகைய தீர்மானமானது இச்சட்டத்தினால் பாதிக்கப்படுதலாகாது.

(4) ஏதேனும் செயல் அல்லது காரியம் நிருவாக மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபரினால் அந்த நிருவாக மாவட்டத்தின் ஏதேனும் பாகத்தில் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளவிடத்தும் அது நியமித்த தேதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்படாதுள்ளவிடத்தும் அத்தகைய செயல் அல்லது காரியம், அந்த நிருவாக மாவட்டத்தின் அந்தப் பாகமானது எப்பெரும்பாகத்தில் அமைந்துள்ளதோ அப்பெரும்பாகத்தினது பெரும்பாகச் செயலாளரினால் கொண்டுநடாத்தப்பட்டு பூர்த்தியாக்கப்படலாம்.

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

9. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — பொருள் கோடல்.

பெரும்பாகம் ஒன்று தொடர்பிலான "பெரும்பாகச் செயலாளர்" என்பது அரசாங்கத்தினால் அப்பெரும்பாகத்துக்கு நியமிக்கப்பட்ட பெரும்பாகச் செயலாளர் என்று பொருள்படும் என்பதுடன் அத்தகைய பெரும்பாகச் செயலாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அத்துடன் புரிவதற்கு, பெரும்பாகச் செயலாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் உதவிப் பெரும்பாகச் செயலாளரையும் உள்ளடக்கும்.